கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 294/2020 வா.சா.1 சரவணபிரகாஷ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 23.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

9) எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 5-ல் வழக்கு 3ம் அயிட்டம் அரணி வாய்க்கால் காடா திட்டம் ஒற்றைக்கல் அரணிவாய்க்காலாக அமைத்துக்கொடுத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது எந்த ஆண்டு அமைக்கப்பட்டது என என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கடந்த 1980 - 1981- ல் அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு 3ம் அயிட்ட அரணிவாய்க்காலுக்கு எத்தனைபேர் பயனாளிகள் என்றால் 10 முதல் 12 நபர்கள் பயன்பெறுவார்கள். வழக்கு 3ம் அயிட்ட அரணிவாய்க்காலை 4ம் பிரதிவாதி அழித்ததாக சொல்லப்படும் சமயத்தில் வேறு பயனாளிகள் புகார் அளித்தார்களா என்றால் எனக்கு வரும் வாய்க்காலை மட்டும் அழித்ததால் வேறு பயனாளிகள் புகார் அளிக்கவில்லை.

10) வழக்கு 3-ம் அயிட்ட சொத்து அரணிவாய்க்கால் மடை எண்.8-ல் இருந்து பிரியும் கிளைவாய்க்காலில் எத்தனைபேர் பயன்பெறுகிறார்கள் என்றால் 15 முதல் 18 விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். மடை எண்.8-ல் பிரியும் அரணிவாய்க்காலை அழித்ததாகதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான்

சொல்வதுபோல் அரணிவாய்க்காலை 4 ம் பிரதிவாதி அழித்திருந்தால் மற்ற பயனாளிகளும் புகார் அளித்திருப்பார்கள் என்றும், அதனை நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

11) நான் 4 ம் பிரதிவாதி அரணிவாய்க்காலை அழித்ததாக சொல்லி பொதுப்பணித்துறை உதவி பொறியாளர்களிடம் அழித்த புகாரின்பேரில் அவர் எனக்கு அளித்த பதில்கடிதத்தை வா.சா.ஆ.9-ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 – பதில் கடிதத்தில் *"இதில் 501/B1 காலைக்கு நீர்ப்பாசனம் செய்ய 501/B2A1 காலை வழியாக தென்வடலாக கொண்டு சென்றால் மட்டுமே நீர்ப்பாசனம் செய்ய சாத்தியக் கூறுகள் உள்ளது என்பது தொழில்நுட்ப ரீதியாகவும் மற்றும் பத்திர எண்.913/1964 மற்றும் 914/1964 ஆகிய பதிவுத்துறை ஆவணங்களின் மூலமாகவும் தெரியவருகிறது"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறியதுபோல் 4 ம் பிரதிவாதிக்கு சொந்தமான வழக்கு 2 ம் அயிட்ட சொத்தில் வழக்கு 3 ம் அயிட்ட ஒற்றைக்கல் அரணிவாய்க்கால் இருந்திருக்குமே ஆனால் பொதுப்பணித்துறை பதில் கடிதத்தில் அந்த வாய்க்காலை பற்றி குறிப்பிட்டு இருப்பார்கள் என்றும், சாத்தியக்கூறுகள் பற்றி குறிப்பிட்டு இருக்கமாட்டார்கள் என்றும், சொன்னால் சரியல்ல.

12) தற்போது எனக்கு பாத்தியப்பட்ட வழக்கு 1ம் அயிட்ட சொத்துக்கள் என் தந்தையால் எனக்கு வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கடந்த 2013-ல் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விபரத்தில் க.ச.எண்.501/B1 சொத்தில் மொத்த பரப்பளவு பு.ஏ.4.23 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 சொத்துக்கள் என் தந்தைக்கு

சண்முககவுண்டர் என்பவர் கடந்த 1964-ஆம் வருடம் வா.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி கொடுத்த சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் க.ச.எண்.501/B1 சொத்தில் மொத்த பரப்பளவு பு.ஏ.3.93 என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதன்பின்னிட்டு உட்பிரிவு செய்யப்பட்டபோது பரப்பளவு கூடியது. என் தந்தை பு.ஏ.3.93 மட்டுமே கிரையம் பெற்றபோது எனக்கு அவர் கூடுதலாக 30 செண்ட் சேர்த்து பு.ஏ.4.23 ஆக செட்டில்மெண்ட் செய்ததது சட்டபடியானது அல்ல என்றும், அதனால் வழக்கு சொத்து விபரமே தவறு என்றும், சொன்னால் அதன்பின்னிட்டு உட்பிரிவு செய்யப்பட்டபோது பரப்பளவு கூடியது. நான் கூறுவதுபோல் உட்பிரிவின்போது பரப்பளவு கூடுவதற்கு வாய்ப்பில்லை என்றும், தனக்கு பாத்தியமில்லாத 3ம் நபரின் சொத்துக்களையும் சேர்த்து என் தந்தை சட்டவிரோதமாக எனக்கு செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றும், சொன்னால் சரியல்ல.

13) 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு 2 ம் அயிட்ட சொத்து பரப்பளவு ஒரு ஏக்கர் என்றால் சரிதான். வழக்கு 2ம் அயிட்ட சொத்தின் முந்தைய உரிமையாளர்கள்தான் 1, 2, 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி 1, 2, 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் என் உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்படி 1, 2, 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி 1, 2, 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் எனக்கு வழக்கு 2ம் அயிட்ட சொத்தை விலைக்கு கொடுக்காததாலும், 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாலும் அவர்களை வீண் அலைக்கழிப்பு செய்யவேண்டும் என்ற தீய எண்ணத்தில் அவர்களுக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல. நான் கூறுவதுபோல் வழக்கு 2ம் அயிட்ட சொத்தில், வழக்கு 3ம் அயிட்ட ஒற்றைக்கல் அரணிவாய்க்கால் இருந்திருந்து அதனை 4ம் பிரதிவாதி அழித்திருந்தால் வருவாய் துறையினரும், பொதுப்பணித்துறையினரும் 4ம் பிரதிவாதி மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும், அவ்வாறு எதுவும் செய்யாததால்தான் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், சொன்னால் வருவாய் துறையினர் நடவடிக்கை எடுத்தனர். அவ்வாறு வருவாய் துறையினர் நடவடிக்கை எடுத்தற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14) நானும், 7ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து இல்லாத வாய்க்காலை இருப்பதாக காண்பிக்க பொய் சங்கதிகள் கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி அரணிவாய்க்காலை கட்டிக்கொடுக்கவேண்டும் என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு அரணிவாய்க்காலை கட்டிக்கொடுக்க 4ம் பிரதிவாதிக்கு எவ்வித கடப்பாடும் இல்லை என்றால் அவர் அழித்ததால் அவர்தான் கட்டிதரவேண்டும். நான் கூறுவதுபோல் வழக்கு சொத்துக்களில் வாய்க்காலை இருந்ததை நிரூப்பிக்கவேண்டியவர்கள் வருவாய் துறையினர்தான் என்றால் சரியல்ல. வருவாய் துறையினரை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

15) Tamilnadu Irrigation Works ( Construction of field Bothies ) Act, 1959. படி மாவட்ட ஆட்சியர் தலைமையிலான வருவாய்துறையினர்தான் நான் குறிப்பிடும் ஒற்றைக்கல் அரணிவாய்க்கால்களை காண்காணித்து பொதுப்பணித்துறை மூலம் பராமரித்து செய்துவருகிறார்கள் என்றால் தெரியாது. மேற்படி சட்டப்படி வருவாய்

துறை மற்றும் பொதுப்பணித்துறையிடம் புகார் அளித்து அவர்கள்மூலம்தான் நான் பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. வருவாய்துறையினரையும், பொதுப்பணித்துறையினரையும் வழக்கில் தரப்பினராக சேர்த்திருந்தால் எனக்கு அரணிவாய்க்கால் பாசனஉரிமை இல்லை என்ற உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் அவர்களை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வருவாய்துறையினரையும், பொதுப்பணித்துறையினரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அவசிய தரப்பினரை சேர்க்காததோசத்தால் பாதிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

16) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னிட்டு 6 மாதங்கள் கழித்துதான் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு பதிவுசெய்துள்ளார் என்றால் காலதாமதம் குறிப்பாக எனக்கு ஞாபகமில்லை. நான் என் முதல்விசாரணையில் மேற்படி ஆணையர் அறிக்கை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு பொய்யான சங்கதிகள் கண்டும், தவறான சொத்து விபரம் கண்டும் அவசியதரப்பினரை சேர்க்காமலும் தாக்கல் செய்துள்ளதால் வழக்கு பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும், சொன்னால் சரியல்ல.

(5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).